## முத்தமிழறிஞர் கலைஞரால் தொடங்கப்பட்ட இத்துறை சிறப்பாகப் பயணிக்கிறது!

# ‘விளையாட்டுத் துறையிலும் தமிழ்நாட்டில் நம்பர் 1’ நிலையை உருவாக்குவோம்!

## ‘முதலமைச்சர் கோப்பை - 2023’ போட்டிகள் நிறைவு விழாவில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, ஜூலை 27 –**

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.07.2023) சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற “முதலமைச்சர் கோப்பை – 2023” போட்டிகள் நிறைவு விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரையில் ‘‘முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கிய துறை இது! முதலமைச்சரின் வழிகாட்டலில் கலைஞரின் நோக்கத்தை நோக்கியே – தமிழ்நாடு விளையாட்டுத் துறை பயணப்பட்டுக் கொண்டிருக்கிறது!’’ என்றும், ‘‘விளையாட்டுத் துறையிலும் தமிழ்நாடு நம்பர் 1 என்ற நிலையை அடைய, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்’’ என்றும் குறிப்பிட்டார்.**



அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

‘முதலமைச்சர் கோப்பை 2023’ - விளையாட்டுப் போட்டிகளில் மாநில அளவில் வென்றோருக்கு கோப்பை பரிசு மற்றும் சான்றிதழை வழங்குகிற இந்த நிறைவு விழா, முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மேலும், சமீபத்தில் பஞ்சாப் அமிர்த சரஸில் நடைபெற்ற தேசிய சீனியர் மகளிர் கால்பந்தாட்டப் போட்டியில் தங்கம் வென்ற நம் மாநில மகளிர் அணி வீராங்கனையருக்கு, உயரிய ஊக்கத்தொகையாக ரூபாய் 60 லட்சத்தை முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளுக்கான அறிவிப்பை, முதலமைச்சர் அவர்கள் 44வது செஸ் ஒலிம்பியாட் நிறைவு விழா மேடையில் தான் அறிவித்தார்கள்.

இன்றைக்கு செஸ் ஒலிம்பியாட்டை போலவே, முதலமைச்சர் கோப்பை 2023 விளையாட்டுப் போட்டிகளும் மிகச்சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

திராவிட மாடல் அரசின் இரு கண்களாக கல்வி மற்றும் சுகாதாரத்தை நம் முதலமைச்சர் அவர்கள் கூறுவார்கள். நல்ல கல்விக்கு மன நலமும், சுகாதார வாழ்வுக்கு உடல் வலிமையும் அவசியம். அந்த வகையில்தான் முதலமைச்சர் அவர்கள், கல்வி, சுகாதாரத்துக்கு இணையாக விளையாட்டுக்கும் முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள்.

கல்வியும், சுகாதாரமும் நம் அரசின் இரு கண்கள் என்றால், விளையாட்டுத் துறை என்பது இன்றைக்கு இதயமாக இருந்து வருகிறது. அதற்கு ஒரு சான்றுதான் இந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள். நான் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றதும், “முதலமைச்சர் கோப்பை - 2023” ஐ நடத்துவதற்கு ரூ.51 கோடி ஒதுக்கீடு செய்வதற்கான கோப்பில் தான் முதல் கையெழுத்திட்டேன்.

முதலமைச்சர் அவர்கள், இந்தப் போட்டிகளுக்கான நிதியை வழங்கி உற்சாகப்படுத்தியதோடு, அவ்வப்போது, போட்டிகள் எவ்வாறு நடக்கின்றன. வீரர்கள் எப்படி விளையாடுகிறார்கள் என்று தொடர்ந்து அதனை Follow up செய்து வந்தார்கள். அதன் விளைவு தான், இந்தப் போட்டிகள் மிகச்சிறப்பான முறையில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் வரலாற்றில் இப்படியொரு பிரம்மாண்டமான விளையாட்டுப் போட்டிகளை அரசே முன்நின்று நடத்துவது என்பது இதுவே முதல் முறை. விளையாடவாருங்கள் என்று ஒரு வார்த்தைதான் கூறினோம். 38 மாவட்டங்கள், 5 பிரிவுகள், 15 விளையாட்டுகள் என 3 லட்சத்து 58 ஆயிரம் வீரர் - வீராங்கனையர் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றார்கள். இதனை ஒரு விளையாட்டுத் திருவிழா என்றே கூறலாம்.

பள்ளி – கல்லூரி மாணவர்கள், அரசு ஊழியர்கள், பொதுமக்கள், மாற்றுத்திறனாளிகள் என தனித்தனிப்பிரிவாகப் போட்டிகளை நடத்தினோம். முன்பெல்லாம் விளையாட்டுப் போட்டிகள் என்றால் மாணவர்கள் தயாராவார்கள். ஆசிரியர்கள் அவர்களுக்கு துணை நிற்பார்கள். இன்றைக்கு, ஆசிரியர்கள், மாணவர்கள் என இருவரும் Ground க்குச் சென்று முதலமைச்சர் கோப்பை போட்டிகளுக்காக பயிற்சி மேற்கொண்டார்கள் என்பது சிறப்புக்குரிய மாற்றமாகும்.

> **தற்போதுகூட மணிப்பூரில் ஓர் அசாதாரணச் சூழல் நிலவுகிறது. மணிப்பூர் மாநிலம் விளையாட்டு வீரர்கள் நிரம்பிய மாநிலம். அவர்கள் பயிற்சி மேற்கொள்ள முடியாத சூழல் உள்ளது. தமிழ்நாட்டுக்கு வந்து பயிற்சி மேற்கொள்ளலாம் என்று இந்திய ஒன்றியத்திலே ஓர் அறிவிப்பை வெளியிட்ட முதலமைச்சர், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மட்டுமே.**

## ‘முதலமைச்சர் கோப்பை – 2023’ ஐ பிரம்மாண்டமான முறையில் நடத்த உத்வேகமும் ஊக்கமும் தந்த முதலமைச்சருக்கு நன்றி!

இன்னொருபுறம் அரசு ஊழியர்களும் அதிகளவில் பங்கேற்றுள்ளார்கள். மாற்றுத்திறனாளி சகோதரி – சகோதரர்களும் நிறைய கலந்து கொண்டிருக்கிறீர்கள்.

இப்படி எல்லாத் தரப்பையும் உள்ளடக்கி நேர்மையாகவும் – வெளிப்படையாகவும் இந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்தியதால்தான், இன்றைக்கு முதலமைச்சர்கோப்பைவிளையாட்டுப் போட்டிக்கு மிகப்பெரிய அளவில் வரவேற்பு கிடைத்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் ஒன்று கூட விடுபட்டு விடக் கூடாது என்ற முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின் பேரில் இந்தப்போட்டிகளை நடத்தியுள்ளோம்.

### தனி அமைச்சகம்!

இங்கு பலர் வெற்றி பெற்று, நம் முதலமைச்சர் அவர்களுடைய கரங்களிலிருந்து கோப்பைகளை பெறவுள்ளார்கள். இந்த வெற்றி அவர்களுக்கானது மட்டுமல்ல. இது தமிழ்நாட்டுக்கான வெற்றி. நம்பர் 1 விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும் என்று பள்ளிக்கல்வித் துறையிலிருந்த விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு தனி அமைச்சகம் ஒன்றினை 2006 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உருவாக்கினார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்ன நோக்கத்திற்காக இந்தத் துறையை உருவாக்கினார்களோ, முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டலில், இந்த துறை அந்த நோக்கத்தை நோக்கியே பயணப்பட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக தமிழ்நாட்டை விளையாட்டுத்துறையின் தலைநகராக்க வேண்டும் என்பதே நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கனவு. அதை நிறைவேற்றுகிற வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை நம்முடைய துறையின் சார்பில் மேற்கொண்டு வருகிறோம்.

தற்போதுகூட மணிப்பூரில் ஓர் அசாதாரணச் சூழல் நிலவுகிறது. மணிப்பூர் மாநிலம் விளையாட்டு வீரர்கள் நிரம்பிய மாநிலம். அவர்கள் பயிற்சி மேற்கொள்ள முடியாத சூழல் உள்ளது. தமிழ்நாட்டுக்கு வந்து பயிற்சி மேற்கொள்ளலாம் என்று இந்திய ஒன்றியத்திலே ஓர் அறிவிப்பை வெளியிட்ட முதலமைச்சர், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மட்டுமே.

12 ஆண்டுகளுக்குப் பிறகு 76 பயிற்சியாளர்களை (Coaches) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துக்கு மிக மிக வெளிப்படைத்தன்மையுடனும், Merit அடிப்படையிலும் நியமனம் செய்தோம். அதேபோலவே, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதிகளில் தங்கிப் படிப்பதற்கான சேர்க்கையை (Admissions) எந்த ஒரு பரிந்துரையும் (recommendation) இல்லாமல், ‘மெரிட்’ அடிப்படையில் நடத்தி முடித்தோம். இதற்கெல்லாம் எங்களுக்கு உறுதுணையாகவும், ஆற்றலாகவும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்தார்கள். விளையாட்டுத்துறையில் தமிழ்நாடு பன்னாட்டு அளவில் தடம்பதிக்க வேண்டுமென்ற லட்சியத்தோடு தொடர்ந்து பல்வேறு சர்வதேச அளவிலான போட்டிகளை கழக அரசு நடத்தி வருகிறது.

### ஆசிய கோப்பை ஹாக்கி போட்டிகள்!

முதல்முறையாக World Cup Squash போட்டியை நடத்தினோம். எட்டு நாடுகள் பங்கேற்ற இப்போட்டி கோலாகலமாக நடைபெற்றது. இதற்காக முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 2 கோடியை ஒதுக்கித் தந்தார்கள். இதுமட்டுமன்றி, 16 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னையில் ஆசிய கோப்பை ஹாக்கி போட்டிகள் வருகிற ஆகஸ்ட் 3 ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளன. இதற்காக 9 கோடி ரூபாய் அளவில் புதிய ஒலிம்பிக் Turf கொண்ட மைதானத்தை உருவாக்கியுள்ளோம். மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியமும், இதற்காக முழுவீச்சில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவிலேயே முதன் முறையாக World Surfing League – ஐ மாமல்லபுரத்தில் ஆகஸ்ட் மாதம் நடத்தவுள்ளோம். HCL Cyclothon போட்டியை வரும் அக்டோபர் மாதம் நடத்தவுள்ளோம். இதுமட்டுமல்ல, தமிழ்நாடு விளையாட்டில் சிறந்து விளங்குவதை அங்கீகரிக்கும் விதமாக, Khelo India Youth Games போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்த ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது.

உலகத்தரத்திலான Global Sports City, தொகுதிக்கு ஒரு மினிஸ்டேடியம், கலைஞர் நூற்றாண்டு ஸ்போர்ட்ஸ் கிட்ஸ், மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு மைதானம் இப்படி விளையாட்டுத்துறையை அடுத்தகட்டத்துக்கு எடுத்துச் செல்லும் வகையில் ஏராளமான நடவடிக்கைகளை முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின் பேரில் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம்.

### உயரிய ஊக்கத் தொகை!

நம்முடைய தமிழ்நாட்டு வீரர்கள், தேசிய சர்வதேச அளவிலான போட்டிகளில் சாதிக்கிற போது, அவர்கள் மேலும் பல்வேறு சாதனைகளை புரிய, 1,700 வீரர்களுக்கு 2021 ஆம் ஆண்டு முதல் ரூபாய் 61 கோடி உயரிய ஊக்கத்தொகை (high cash incentive) வழங்கப்பட்டுள்ளது.

முக்கியமாக, ஏழை – எளிய விளையாட்டு வீரர்களுக்கு உதவிடவும், விளையாட்டுத்துறைக் கட்டமைப்பை மேம்படுத்தவும் முதலமைச்சர் அவர்கள் கடந்த மே மாதம் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையைத் தொடங்கி வைத்தார்கள். தொடங்கி வைத்ததோடு மட்டுமன்றி, தன் சொந்த நிதியிலிருந்து ரூபாய் 5 லட்சத்தை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு வழங்கினார்கள். அதற்கு இந்த நேரத்தில் மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு, இதுவரை பல்வேறு நிறுவனங்கள் ரூபாய் 15 கோடியே 30 லட்சம் அளவுக்கு நிதியுதவி அளித்துள்ளனர்.

இதிலிருந்து, ஜெர்மனியில் நடைபெறவுள்ள World Dwarf Games ல் பங்கேற்கவுள்ள 6 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர் - வீராங்கனையருக்கு ரூ.15 லட்சம் அளவுக்கு நிதியுதவி செய்துள்ளோம். பிரம்மாண்டமான மேலும், 4 விளையாட்டு வீரர்களுக்கு ஸ்பான்ஸர்ஷிப் என்கிற வகையில் ரூபாய் 35 லட்சம் அளவுக்கு நிதியளித்துள்ளோம்.

இப்படி விளையாட்டுத்துறையிலும் தமிழ்நாடு நம்பர் 1 என்ற நிலையை அடைய, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அதன் ஒரு முயற்சிதான் இந்த முதலமைச்சர் கோப்பை 2023 விளையாட்டுப் போட்டிகள். இது நிறைவு விழா என்றாலும், அடுத்தாண்டு நடைபெறவுள்ள போட்டியில் இன்னும் அதிகமான வீரர்களை பங்கேற்கச் செய்வதற்கான தொடக்கமாக இந்த விழா அமையும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் வென்று இன்றைய தினம் பதக்கங்கள் பெற உள்ள உங்கள் அனைவருக்கும் வாழ்த்துகள். நீங்கள் தேசிய, சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்று தமிழ்நாட்டுக்கு மென்மேலும் பெருமைகளை சேர்க்க வேண்டும். உங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான கழக அரசு துணை நிற்கும்.

‘முதலமைச்சர் கோப்பை 2023’ ஐ பிரம்மாண்டமான முறையில் நடத்த உத்வேகமும் ஊக்கமும் தந்த முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போட்டிகளை சிறப்பாக நடத்திக் காட்டிய துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா அவர்களுக்கும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி அவர்களுக்கும், தமிழ்நாடு முழுவதுமிருந்து பங்கேற்ற விளையாட்டு - வீரர் - வீராங்கனையருக்கும், பயிற்சியாளர்களுக்கும் (Coaches), நடுவர்களாக (Referee) சிறப்புடன் செயல்பட்டவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கும், உடற்கல்வி இயக்குநர்கள், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள், உடற்கல்வி ஆசிரியர்களுக்கும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் விளையாட்டு அமைப்புகளைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் என அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.